DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 54/2020**

**Deposition of LW9 examined as PW8** Dt. 27.10.2025

| | |
|---|---|
| Name | ராஜதுரை (Rtd SI of Police) |
| Father's Name | அழகர் |
| Village | நெப்பத்தூர் |
| Taluk | சீர்காழி |
| Age | 63/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 27.10.2025

(A1,A2,A4 present. A3 called absent. U/s. 355 of BNSS petition filed and allowed)

எதிரிகள் தரப்பில் சாட்சியை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் அழைக்க மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டு எதிரிகள் தரப்பில்

**குறுக்கு விசாரணை**

சிறப்பு உதவி ஆய்வாளர் சங்கர் புகாரை பெற்று ஆறு நாட்கள் கையில் வைத்திருந்தார் என்றால் நிலைய மனு எண் கொடுத்து அதன் அடிப்படையில் வைத்திருந்தார். அந்த மனுவின் பேரில் விசாரணை நடத்தப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரணை செய்தபோது மனுவின் பேரில் யார் யாரை விசாரணை செய்தார் என்ற விபரத்தை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அவ்வாறு மனுவின் பேரில் விசாரணை செய்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்துள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 உடைய விபத்து பதிவேட்டில் தனது வீட்டில் தெரிந்த நபர் கல்லால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மருத்துவரை விசாரணை செய்தபோது மிளகாய்தூள் கரைசலால் அ.சா.1,2 க்கு காயம் ஏற்பட்டதாக மருத்துவர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2-ன் விபத்து பதிவேட்டில் தெரிந்த 3 நபர்கள் கட்டை, கல் மற்றும் கையால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் மேற்படி விபத்து பதிவேட்டில் OP என குறிப்பிடப்பட்டு வட்டமிட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 யை விசாரணை செய்ததில் மதிய வேளையில் உறங்கி கொண்டிருந்த போது எதிரிகள் எங்கள்

வீட்டுக்குள் புகுந்து சுசிலா என்பவர் மிளகாய் தூளை கரைத்து எங்கள் மீது ஊற்றினார்கள் என்ற முதல் விசாரணையில் தெரிவித்த சங்கதிகளை எனது விசாரணையின் போது தெரிவித்தார்களா என்றால் இல்லை. அதுபோல் எதிரி ஆறுமுகம் என்பவர் அ.சா.1–ன் தலைமுடியை பிடித்து இழுத்து வீட்டிற்கு வெளியே தள்ளி அவரது கையில் கட்டை கழியால் அடித்ததாக முதல் விசாரணையில் தெரிவித்த விவரங்களை எனது விசாரணையின் போது தெரிவித்தாரா என்றால் இல்லை. அ.சா.1 எதிரி ஆறுமுகம் தனது குழந்தைகளை கட்டை கழியால் அடித்ததாகவும், எதிரி செல்லத்துரை தன் கணவரை இழுத்து பிடித்து கீழே தள்ளி அவர் மீது அமர்ந்து கொண்டார் என்றும், எதிரி முத்துக்குமரன் கட்டை கழியால் தன்னை அடித்ததாகவும், எதிரிகள் மிளகாய் தூள் கரைசலை ஊற்றியதில் தனது கணவருக்கு புண்ணாகி விட்டதாக தெரிவித்த விவரங்களை எனது விசாரணையின் போது தெரிவித்தாரா என்றால் இல்லை. அ.சா.2 இளஞ்செழியன் தனது முதல் விசாரணையில் எதிரிகள் அதிரடியாக வீட்டிற்குள் புகுந்து எங்களை உருட்டு கட்டையால் தாக்கினார்கள் என்றும், எதிரி சுசிலா என்பவர் தன்னை வலுக்கட்டாயமாக வெளியில் இழுத்து தள்ளி தன் மீது கொதிநீரில் மிளகாய் கரைசலை கரைத்து ஊற்றியதில் தனக்கு முதுகு புறம் புண்ணாகிவிட்டது என தெரிவித்த விபரங்களை எனது விசாரணையில் தெரிவித்தாரா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கு எதிர் வழக்கு உள்ளது தெரியுமா என்றால் தெரியும். முதலில் புகார் பெறப்பட்டது எதிரிகளிடமிருந்து தான் என்றால் சரிதான். இரண்டு வழக்கிற்கும் புலன் விசாரணை அதிகாரி நான் தான் என்றால் சரிதான். அவ்வாறு செய்தது தவறு என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரம் இடத்தில் பார்வை மகசர், வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றாலும், பின்னிட்டு வழக்கிற்கு ஏற்றார் போல் காவல் நிலையத்தில் வைத்து பார்வைமகசர், வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது இறுதி அறிக்கையை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேல் விசாரணை எங்கு வைத்து செய்யப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் வைத்து செய்யப்பட்டது. என்றைய தினம் செய்யப்பட்டது என்றால் 19.10.2019 அன்று செய்யப்பட்டது. அ.சா.1,2 இருவரையும் எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்ற குறிப்பு வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். அவர்களை மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன். அவ்வாறு மருத்துவமனையில் வைத்து விசாரிக்க தேதி 19.10.2019 என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும், புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரைப் பெற்று எங்களுக்கு கொடுக்கப்பட்ட அழுத்தத்தின் காரணமாக எதிரிகள் மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

27/10/25

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை